2. அறிவிப்புகள்.

1. ஆளுநரிடமிருந்து செய்திகள்

Mr. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 and the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973.

2. பேரவையிலிருந்து செய்திகள்

Mr. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 40 of 1973) and the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 39 of 1973) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :—

1. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 28 of 1973) ;

2. The Tamil Nadu Hackney Carriage (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 34 of 1973);

3. The Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 31 of 1973);

4. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No 38 of 1973).

3. அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

Mr. CHAIRMAN : I have to announce to the House that, under rule 166 (1) of the Council Rules, I have nominated the following Members to be the members of the Business Advisory Committee of the Council for the year 1973–74 :—

1. Hon. Chairman (Chairman).

2. Hon. Dr. M. Karunanidhi, Chief Minister (Leader of the House-Council).

3. Thiru M. P. Sivagnanam, Deputy Chairman.

4. Thiru K. Rajaram.

5. Thiru G. Parangusam.

1973 டிசம்பர் 3]

6. Thiru Saw. Ganesan.
7. Thiru A.R. Damodaran.
8. Thiru S. Jayaram Reddiar.
9. Thiru L. Balaraman.

Hon. the Leader of the House(Assembly) will be a permanent invitee.

4. அரசின் தீர்மானம்.

மேலவை விதி 42 (3)-ஐ நிறுத்தி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (3) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :— "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (3) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்'' தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(1) அரசாங்க உயர்நிலைப்பள்ளி (பி பிரிவு) ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டால் பதவியிலிருந்து நீக்கி, புதிய நியமன உத்தரவு பிறப்பித்தல்.

பி. ப. 4-20.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்:—

"கல்வி இயக்குநரின் உத்திரவு எல். டிஸ். 121469/73 தேதி 1—4—1970-ன் படி தமிழ் நாட்டில் அரசாங்க உயர்நிலைப் பள்ளி (பி பிரிவு)-யில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் மாறுதல்கள் மனுவை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்றும், மாறுதல் செய்தால், பதவியிலிருந்து நீக்கி, பின் புதிய நியமன உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற உத்திரவின்படி "பி" பிரிவு பள்ளிகளில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து".